# சிலப்பதிகாரத்தின் தூண்கள்

16

**சா.தங்கமாரியப்பன்,**
**உதவிப் பேராசிரியர் & தலைவர்,**
**தமிழ்த்துறை,கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி,**
**தன்னாட்சி - (சுயநிதிப் பாடப்பிரிவுகள்), கோவில்பட்டி.**

**ஆய்வு நோக்கம்**

வினைவிளை காரணமாக நிகழ்ந்ததைக் கூறுகின்ற சிலப்பதிகாரத்தில் கோவலனின் முற்பிறப்பு மற்றும் சிலப்பதிகாரத்தைத் தூக்கி நிறுத்துகின்ற அதன் சில கிளைக்கதைகளையும் எடுத்தியம்புவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுச்சுருக்கம்**

கோவலனின் முற்பிறப்பு பற்றிய செய்தியில் சங்கமனின் மனைவி நீலியின் சாபத்தால்தான் கோவலனின் இறப்பும் கண்ணகியின் துயரும் நேர்ந்தது என மதுராபதி தெய்வம் சொன்ன செய்தியும், செங்குன்றத்துக் குறவர்கள் சொன்ன செய்தியால் சாத்தனார் அறிந்ததைக் கூற இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை இயற்றியதும், கண்ணகிக்குப் பிற மன்னர்கள் எழுப்பித்த கோயில்கள் பற்றியும் மாற்றாளின் மகவிற்குப் பால் கொடுக்க, பால்விக்கி இறந்த குழந்தைக்குப் பதிலாக பாசண்டச் சாத்தன் மாயக் குழந்தையாக வருகின்ற செய்தியும் சோழநாட்டு ஏழு பத்தினிப் பெண்கள் பற்றி கண்ணகி எடுத்துரைக்கும் செய்தியும் இவ்வாய்வுக் கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

**உப தலைப்புக்கள்**

முன்னுரை, கோவலனின் முற்பிறப்பு, பதிகவரலாறும் உரைபெறு கட்டுரையும், மாலதி துயரும் சாத்தனின் அருளும், பத்தினிப் பெண்கள், முடிவுரையென இவைகள் இவ்வாய்வின் உப தலைப்புக்கள் ஆகும்.

**முன்னுரை**

கண்ணகி கோவலன் மாதவி மற்றும் பாண்டிய மன்னன் போன்ற இவர்கள் மட்டுமல்ல சிலப்பதிகாரம். சிலப்பதிகாரத்தைத் தூக்கி நிறுத்துகின்ற தூண்கள் பலவுள்ளன. அவையனைத்தும் கிளைக் கதைகளாகக் காணப்படுகின்றன. பதிகவரலாறும், உறைபெறு கட்டுரையும் கோவலனின் முற்பிறப்புப் பற்றிய கதையும், காவல் பூதக் கதையும் கண்ணகியின் தோழி தேவந்தியின் கணவனான பாசண்டச் சாத்தனின் கதையும் அடைக்கலக் காதையில் வருகின்ற எட்டிப்பட்டம் பெற்ற சாயலனின் மனைவி செய்த தானதர்மக் கதையும் மற்றும் பத்தினிப் பெண்களின் கதையுமெனயுள்ள இவையனைத்தும் சிலப்பதிகாரத்தை அணி செய்கின்றன. அவற்றைப் பற்றியிவ்வாய்வுக் கட்டுரையில் காண்போம்.

**கோவலனின் முற்பிறப்பு**

மதுரை மாநகர் தெய்வமான மதுராபதி வாய்மொழி வழியாக, கண்ணகி கோவலனின் முற்பிறப்புச் செய்தியை அறிகிறாள். இது மதுரைக் காண்டம் கட்டுரை காதையில்இடம்பெற்றுள்ளது.

**“கடிபொழில் உடுத்த கலிங்க நல்நாட்டு**

**- - - - - - - - - - - - - - - - - -**

**தாய வேந்தர் தம்முட் பகையுற” (பக்.284. பா.வ.138-144)**

அதாவது, கலிங்கம் எனும் பெரிய நாட்டில் சிங்கபுத்தை வசுவும் மூங்கில்கள் கபிலபுரத்தை குமரனும் ஆண்டுவந்தனர். இவ்விருவர் நாட்டிற்கும் இடைப்பட்ட ஆறுகாத தூரத்திலுள்ள இடைநிலத்தில் எப்போதும் ஒருவரையொருவர் வெற்றி கொள்ளும் பொருட்டு போரிட்டுக் கொண்டேயிருந்தனர். எனவே அவ்வழி எவரும் போவதும் வருவதுமில்லை.

அரும்பொருள்களின் மேற்கொண்ட ஆசையினால் சிறந்த அணிகலன்களைச் சுமந்தவனாகத் தன்நாட்டை விட்டு வெளியேறிச் செல்லும் மக்களில் ஒருவனாகத் தன் மனைவி நீலியையும் கூட்டிக் கொண்டு கபிலபுரத்து வணிகனாக சங்கமன் என்பவன் சிங்கபுரத்திற்குள் புகுந்து ஒரு கடை வீதியில், தான் கொணர்ந்து வந்த அருங்கலன்களை விற்றுக் கொண்டிருந்தான். பரதன் எனும் பெயரினை உடைய ஒருவன் சங்கமனை “ஒற்றன் இவன்” எனப் பிடித்துக் கொண்டுபோய் மன்னனுக்குக் காட்டிக் கொன்றான். கொலைக் களத்தில் இறந்து கிடந்த சங்கமனின் மனைவியான நீலி அரசரே முறையோ? பரதரே முறையோ ஊரீரே முறையோ சேரியீரே முறையேவென்று அரற்றியவளாக மன்றங்களிலும் தெருக்களிலும் கூச்சலிட்டுச் சென்றாள். பதினான்கு நாள்கள் சென்றபின், தன் கணவதைத் தொழும் நாள் அது எனப் பலவாக அவனைப் போற்றி, மலையிச்சியிலே ஏறி தன் கணவனோடு தானும் இறந்து ஒன்று சேரக் கருதியவளாக நின்று, எமக்கு இத்தகைய பெருந்துன்பம் செய்தவர் எவ்வகையானும் தாம் அடையும் பெருந்துயரமும் இதுவே ஆகுகவென்று கூறியபடியே விழுந்திறந்தாள். அவளிட்ட குற்றமற்ற சாபத்தின்படியே இத்துன்பத்தினை நீங்கள் இப்பிறப்பிலே இப்போது அடைந்தீர்கள் என்று மதுராபதி தெய்வம் சொல்லியது.

முற்பிறப்பில் பரதனாகப் பிறந்து சங்கமனை ஒற்றனெனப் பொய் சொல்லி கொன்றவன்தான் இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்து, நீலியின் சாபத்தால் வினைப்பயனாகப் பொற்கொல்லனால் கள்வனாகக் காட்டப்பட்டுக் கொல்லப்பட்டான் என்பதை,

**“சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்தினோர்**

**- - - - - - - - - - - - - - - - -**

**நிலைக்களங் காணாள் நீலி என்போள்” (பக்.284. பா.வ.145-159)**

எனும் வரிகளாலும்,

**“மலைத்தலை ஏறியோர் மால்விசும்பு ஏணியில்**

**கொலைத்தலை மகனைக் கூடுபு நின்றோள்**

**எம்முறு துயரமிற் றாகுக என்றே**

**விழுவோள் இட்ட வழுவில் சாபம்**

**பட்டனிர் ஆதலின் கடபுடரை கேள்நீ:" (பக்.286.பா.வ.165-170)**

எனும் வரிகளாலும் அறியலாம்.

**பதிகவரலாறும் உறைபெறு கட்டுரையும்**

சிலப்பதிகாரம் எனும் நூல் எழுந்தது பற்றி இணைக்குறள் ஆசிரியப்பாவால் பதிகம் பாடப்பட்டுள்ளது. இதனுள் நூலின் பாகுபாட்டு முறையினையும் இளங்கோவடிகளை இந்நூல் எழுத தூண்டுகோலாக அமைந்த குறவர் கண்ட நிகழ்ச்சியையும் அதனைப் பற்றிச் சாத்தனார் விளக்கிய உரையும், நூலைச் செய்த வகையைப் பற்றியும் இது எடுத்துரைக்கின்றது.

சேர மரபினரான இளங்கோவடிகள் அரச வாழ்வைத் துறந்து குணவாயிற் கோட்டத்தில் துறவியாகத் தங்கியிருந்து வந்தார். ஒருநாள் அவரிடம் திருச் செங்குன்றத்துக் குறவர்கள் கூட்டமாகக் கூடிவந்து, வேங்கை மரத்தின் நிழலில் தன் ஒருமுலையினை இழந்தவள் திருமாடத்தில் நின்றதைக் கண்டோம். தேவலோகத்தைச் சார்ந்தவர்களுள் சிலர் அவ்விடம் நோக்கி இறங்கி வந்து அவளருகே சென்று அவளுடைய அன்பான கணவனைக் காட்டி அவளையும் அழைத்துக் கொண்டு விண்ணுலகம் சென்றனர். இவற்றை எம் கண்களால் கண்டோம். இது ஓர் அதிசயம் போன்றிருந்தது. இதனை அடிகளே நீங்களும் அறிந்தருள்வீராக என்றனர்.

குறவர்களின் கூற்றினைக் கேட்ட இளங்கோவடிகளின் அருகிருந்த சாத்தனார் அதனைப் பற்றியான் அறிவேனெனப் புகார் நகரத்து கோவலன் கண்ணகி மற்றும் மாதவி ஆகியோர் பற்றிய செய்தியைக் கூறுகிறார். இதனை,

**"அவண்உழை யிருந்த தண்தமிழ் சாத்தன்**

**யானறிருவேன் அதுபட்டது என்று உரைப்போன்**

- **- - - - -- - - - - - - - - - - - -**

**வினைவிளை என்ன - - - - - - - - - - " (பக்.8, பா.வ.10-38)**

எனும் வரிகளால் அறியமுடிகிறது. மேலும் அதென்ன வினைவிளை காலமென இளங்கோவடிகள் கேட்டவுடனே,

**" - - - - - - விறலோய் கேட்டி**

**அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்**

- **- - - - - - - - - - - - - - - - -**

**கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்" (பக்.10.பா.38-54)**

மதுரை மூதூரில் கொன்றை மலர் விளங்கும் அழகிய சடை முடியினை உடைய இறைவனின் கோவில் மன்றமாகிய பொதுவிடத்தில் வெள்ளியம்பலம் எனும் பகுதியில் நள்ளிருள் யாமத்தில் யானும் ஒருநாள் படுத்துக் கிடந்தேன். அப்போது, ஆறாத் துயரங் கொண்ட வீரபத்தினியின் முன்னர், மதுரைமா தெய்வம் வந்து தோன்றியது. சினத்தால் இந்நகருக்குக் கேடு விளைவித்தளே! முதிர்ந்த வினையின் பயனால் சிங்கபுரத்துச் சங்கமன் எனும் வாணிகனின் மனைவி நின் கணவனுக்கு

இட்டசாபம் இப்போது வந்து நிறைவேறியுள்ளது. உன் கணவனை இங்குள்ளவர்போல் மனிதவடிவில் இனிக்காண்பது இயலாது. ஆகவே இன்றிலிருந்து பதினான்காம் நாள் பகற்பொழுது முடியும் தறுவாயில் வானவர்களின் வடிவிலே காண்பாயென்று கூறியது. கோணுதலற்ற அந்த மதுரைமா தெய்வம் இப்படிக் கூறியதை அந்நள்ளிருள் யாமத்தில் யானும் என் காதாரக் கேட்டேனெனச் சாத்தனார் கூறினார்.

உடனே, அரசியல் நெறியில் பிழைத்தவர்களுக்கு அறமே கூற்றமாக அமைந்து அவர் உயிரைப் போக்குவதும், புகழ் மிகுந்த பத்தினிக்கு உயர்ந்தோரின் போற்றுதல் உண்டாகுமென்பதும், முன்செய்த ஊழ்வினையானது பிற்பிறவியில் சினந்து வந்து, அதற்குரிய பயனை ஒருவருக்கு ஊட்டும் என்பதும் மிகச்சிறந்த அறநெறிகளாகும். இங்கு வினை வந்து சூழுவதற்குச் சிலம்பே காரணமாயிற்று. எனவே யாமொரு பாட்டுடைச் செய்யுளை இயற்றுவோமென இளங்கோவடிகள் கூறினார். அதற்கு சேர, சோழ பாண்டியரென மூவருக்கும் உரியது. அதனை அடிகள் நீரே அருளிச் செய்வீராக எனச் சாத்தனார் கூற முப்பது பகுப்பாக சிலப்பதிகாரம் எனும் நூல் தோன்றியது.

சிலப்பதிகாரத்தின் முப்பது பகுப்புகளில் அடங்காமல் தனித்திருப்பது உரைபெறு கட்டுரையாகும். அதாவது, கோவலனின் கொலைக்குப் பின்னர், கண்ணகி பத்தினித் தெய்வமாவதும், அவளுக்குக் கோயில் கட்டி,பலியிட்டு வெற்றிவேற்செழியன், கொங்கு இளங்கோசர், கடல்சூழ்ந்த இலங்கை நாட்டின் வேந்தனான கயவாகு மன்னன், சோழன் பெருங்கிள்ளி போன்ற நாட்டினர் போற்றி அவள் அருளால் தத்தம் நாட்டில் வளமை பெற்றனர் என்பதையும் இது கூறுகிறது.

ஆக, சிலப்பதிகாரத்திற்கு முன்னும் பின்னுமான செய்திகளை இந்த பதிக வரலாறும் உரைபெறு கட்டுரையும் கூறுவதை நாமறியலாம்.

**மாலதி துயரும் சாத்தனின் அருளும்**

புகார்க் காண்டத்தில் காணப்படுகின்ற ஒன்பதாம் காதையான கனாத்திறம் உரைத்த காதையானது மாலதி என்பவளின் துயரத்தையும் பிணம் தின்னும் இடாகினிப் பேயின் செயலையும் பாசண்டச் சாத்தனின் பேரருளையும் சார்ந்த கிளைக் கதையினை எடுத்துரைக்கின்றது.

முன்னொரு காலத்தில் மாலதி என்பவள் தன்னுடைய மாற்றாளின் மகவுக்குப் பாலூட்டிய போது பால்விக்கி அப்பாலகன் மரித்துவிட, பதறிப்போன மாலதியோ, ஏங்கிப் போனவளாக குழந்தையை எடுத்துக்கொண்டு பல கோயில்களுக்குச் சென்று என்துயரைத் தீருங்கள் என அழுதழுது வேண்டினாள். ஆனாலும் யாதுமொரு பயனின்றிப் போனவளாகப் பெருந்துயருற்றிருந்தாள்.

அதன்பின்னர் பாசண்டச் சாத்தனின் கோயிலை அடைந்த மாலதி, குழந்தை உயிர்பெற வரம் வேண்டிப் பணிந்து அழுது தொழுது கிடந்தாள். அங்கு ஓர் இடாக்கினிப் பேய் தோன்றி, உன் கையிலேயுள்ள உயிரற்ற பிணத்தை என்னிடம் தருவாயாகவென்று பறித்துத் தன் கையில் எடுத்துக் கொண்டு அடர்ந்த சுடுகாட்டிற்குக் கொண்டு போய் அக்குழந்தையின் பிணத்தையும் பிய்த்துத் தன் வயிற்றுனுள் போட்டுக் கொண்டது. இதனை,

> **“பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந்தாருக்கு**
>
> **- - - - - - - - - - - - - - - -**

**மடியகத்து இட்டாள் மகவை"** **(பக்.118.பா.வ.15-21)**

எனும் வரிகளாலும் அறியமுடிகின்றது.

இடாகினிப் பேயின் இச்செயலால் மாலதி ஏங்கி ஏங்கி அழுதாள். பாசண்டச் சாத்தன் அவள்மேல் இரக்கங்கொண்டு, அன்னையே! நீ ஏங்கி அழாதே என்று அவளைத் தேற்றி அதோ, நின் முன்னாலேயே உயிரோடு குழந்தை கிடப்பதைக் காணாய் எனக்கூறி குயில்களையுடைய சோலையின் ஒரு மரத்தடியில் சென்று குழந்தையாகவும் கிடந்தான். மாலதியும் அவ்விடம் சென்று சற்றும் ஐயப்படாமல் அந்த மாயக் குழந்தையை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிச் சென்று அதன் தாயின் கையிலே கொடுத்துத்தன் துயரமும் தீர்ந்தாள் என்பதை,

**"மஞ்ஞை போலேங்கி அழுதாளுக்கு அச்சாத்தன்**

**- - - - - - - - - - - - - - - -**

**தாய்கைக்கொடுத்தாள்அத்தையலாள்தூய்"(பக்.118,பா.வ.22-28)**

எனும் வரிகள் குறிப்பிடுகின்றன. மாயக் குழந்தையாக வந்த பாசண்டச் சாத்தன் வளர்ந்து, பின் பிரம்மச்சர்ய வயது எய்தினான். அவன் பெற்றோர் இறக்க, தந்தைக்கும் தாயார்க்கும் வேண்டிய கடன்களைக் கழித்து, இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்ந்து வந்தான். "தேவந்தி" என்பவள் அவன் மனைவியாவாள். இருவரும் இன்பமுடன் இல்லறம் நடத்தி வந்தபோது, ஒருநாள் சாத்தன் நான் தீர்த்தமாடப் போகிறேன். நீ என் பிரிவைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமெனச் செல்லி, மூப்பு எய்தாத தன் இளமை நலத்தையும் காட்டினான். பின் எம் கோயிலுக்கு நீ வருகவெனச் சொல்லிப் பிரிந்தும் சென்றுவிட்டான்.

"**மறையோன்பின் மாணியாய் வான்பொருள் கேள்வி**

**- - - - - - - - - - - - - - - -**

**நீவா வெனவுரைத்து நீங்கலும் . . . . ."** **(பக்.119. பா.வ. 29-36)**

என்ற வரிகள் அதனைக் குறிப்பிடுகின்றன.

ஆக, கண்ணகியின் நெருங்கிய தோழியாகக் காணப்படுகின்ற தேவந்தியின் கணவனைப் பற்றிய ஒரு கிளைக்கதை காணப்படுவதை அறியமுடிகிறது,

**பத்தினிப்பெண்கள்**

வழக்குரை காதையில் கண்ணகி தான் பிறந்த சோழநாடு பல பத்தினிப் பெண்களைக் கண்ட நாடென்று எடுத்துரைக்கிறாள். காவிரிப்பூம் பட்டினத்தில் வன்னி மரத்தையும் கோயில் மடைப்பள்ளியையும் சான்றாக வைத்து மணம் செய்து கொண்ட ஒருத்தி மணத்திற்கு மறுப்பும் எதிர்ப்பும் வர, அவள் வன்னி மரத்தையும் மடைப்பள்ளியையும் சான்று கூற அவையோர்முன் அழைத்தவுடனே அவையிரண்டும் வந்து சாட்சி சொன்ன அற்புதம் விளைவித்தவளையும், ஒரு சிறுமியிடம், காவிரிக் கரையில் மணல்பாவை ஒன்றமைத்து வைத்து, இவனுன் கணவனாவனென்று தோழியர்கள் கூறிவிட்டுச் செல்ல அந்தயிடத்தை விட்டு அகலாமல் அதனைக் காத்தாள் என்ற

செய்தியையும் கூறுகிறாள்.

கரிகாற் சோழனின் மகள் ஆதிமந்தி. அவள் ஆட்டனத்தியை மணந்தாள். அவனை ஒரு சமயம் காவிரிப் பெருவெள்ளம் அடித்துச் சென்றுவிட அப்போது, ஆதிமந்தி நீரோட்டத்தின் வழியாக கரைமீது தொடர்ந்து சென்று இறுதியில் கடற்கரையில் நின்றாள். ஆட்டனத்தியைக் கடலானது உள் இழுத்துச் செல்லப்பட்டது கண்டு மலையொத்த தோளாயோ! என்று கதறினாள். கடலானது ஆட்டனத்தயை மீட்டுக் கொண்டுவந்து ஆதிமந்தி முன் நிறுத்திக் காட்டியது என்ற தகவலோடு, திரைகடல் கடந்து பொருள் தேடச் சென்ற கணவன் வரும் வரையில் கல்லாக நின்றாள் நல்லாள் ஒருத்தி. அவன் கரைவந்து சேர அவள் கல்லுருவம் கரைந்து தன் பழைய நல்லுருவம் பெற்றாள். அசையாத மனநிலை கொண்ட அவள் எங்களுக்குத் திசை காட்டியாகத் திகழ்கிறாள் என்ற செய்தியையும் கண்ணகி இயம்புகிறாள்.

இதுமட்டுமன்றி, மாற்றாள் குழந்தை கிணற்றில் தவறிவிழ ஆற்றாளாகித் தன் குழந்தையையும் தள்ளி இரண்டு குழந்தைகளையும் அக்கிணற்றில் குதித்து கரை சேர்த்த வீரமகள் பற்றியும், வேற்றுஆள் ஒருவன் ஒருத்தியின் பேரழகைக் கண்டு இடம் பெயராமல் நிற்க அதுகண்ட அவள் தன்முகத்தைக் குரங்கு முகமாகுகவெனக் கூறி ஆடவர் நெஞ்சில் இடம் பெறுவதை அறவே தவிர்த்தாள். தன் கணவன் வந்ததும் தன் திரிந்த முகத்தை மாற்றிச் சிரித்த முகத்தாளாக ஆகினாள். பழை நிலையில் தன்னை மாற்றிக் கொண்டு சீர் பெற்றாள் என்ற கீர்த்திமிக்கவளைப் பற்றியும் எடுத்துரைத்தாள்.

வண்டல் மணலில் அமர்ந்து விளையாடிய சிறுமியர்கள் தங்களுக்குள் வேடிக்கையாகப் பேசிக் கொண்டார்கள். அதிலொருத்தி எனக்கு மகளும் பிறந்து உனக்கு மகனும் பிறந்தால் அவ்விருவரும் பெரியவர்களாவர்களெனின் உன் மகனுக்கு என்மகள் வாழ்க்கைப்படுவாள் என்று சொல்லிவிட்டாள். காலமும் கடந்து சென்றது. தன் மகள் மணப்பருவம் அடைந்ததும் தான் கூறியபடி தன் தோழியின் மகனுக்குத் திருமணம் முடித்துத் தரவேண்டும். ஆனால் தற்போது அவர்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு வந்துவிட இருவரும் நட்பிலிருந்து பிரிந்துவிட்டனர். தயங்கித் தயங்கி தன் கணவனிடம் கூறினாள். இதனைக் கேட்டுவிட்டாள் அவளின் மகள். உடனே மணப்பெண் கோலம் கொண்டு அந்த வீட்டு மகன் முன் மணப்பெண்ணாக வந்து அவன்தான் தன்னை மணமுடிக்கவேண்டுமென்று உறுதியாக நின்று மணம் முடித்தாள். ஒருமுறை ஒருவனைக் கணவனாக ஒருத்திக்குச் சொல்லி விட்டால் அதனை மாற்றாது உறுதியாக நடக்க வேண்டுமென்ற தன்மையை நிலைநாட்டினாள் அவள். இந்தப் பெண்ணின் கதை எம் நகரத்தில் காலங்காலமாகப் பேசப்பட்டு வருகிறது என்றாள்

**முடிவுரை**

மூலக்கதைக்குப் பக்கபலமாகவிருப்பது கிளைக்கதைகளாகும். சிலப்பதிகாரத்தின் கிளைக்கதைகள் அனைத்தும் மூலக்கதையைத் தாங்கி நிற்கும் தூண்களாக விளங்குவதை இவ்வாய்வுக் கட்டுரையின் வழி அறியப்படுகிறது.

**பார்வை நூல்**

சிலப்பதிகாரம், முதல்பதிப்பு-2010, புலியூர்க்கேசிகன் தெளிவுரை ஸ்ரீசெண்பகா பதிப்பகம், பாண்டி பஜார், தியாகராயநகர், சென்னை-600017.